மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி.

அசல் வழக்கு எண். 247/2021

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சியச்சட்டம் 44வது பிரிவு 5ஆவது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.R.கலைச்செல்வி, கிரேடு III என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : ராதாகிருஷ்ணன் (வா.சா.2) | சாதி : |
| த/பெ.க/பெ : | மதம் : |
| கிராமம் : | தொழில் : |
| தாலுகா : | வயது : |

15.02.2024

வாதி தரப்பு சாட்சி 2 மீண்டும் அழைத்ததின் பேரில் 1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை –

1. நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் நாயநேந்தலில் குடியிருந்து வருகிறேன். நான் 12ம் வகுப்பு படித்துள்ளேன். நீதிமன்றத்தில் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் கிராமத்திற்கு பாத்தியப்பட்ட சொத்தை அக்கிரமிப்பு செய்திருந்ததால் ஆக்கிரமிப்பை அகற்ற கோரி பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன். செல்வமோகன் என்பவர் மீது வழக்கு போட்டுள்ளேன். தாவா சொத்தின் சர்வே எண் 23/22 ஆகும். தாவா சொத்தின் விஸ்தீரணம் தெரியாது. தாவா சொத்தின் நான்குமால் வடக்கு அரசு நிலம், மேற்கே 1ம் வாதி ராஜசேகர் நிலம், தெற்கு ராதாகிருஷ்ணன் நான் உள்ளேன். கிழக்கு பக்கம் வீரசோழன் போகும் தார்சாலை உள்ளது. தாவா சொத்திற்கும் என் வீட்டிற்கும் இடையே கிழமேல் பொது பாதை உள்ளது என்றால் சரிதான்.

2. தாவா சொத்திற்கு தெற்கே உள்ள பொதுபாதை வழியாக சென்று வீரசோழன் தார்சாலைக்கு செல்லமுடியும் என்றால் சரிதான். எனது வீட்டில் இருந்து பொது பாதை பயன்படுத்தி தார்சாலைக்கு செல்லமுடியும் என்றால் சரிதான். பொது பாதை என்பது 20 அடி இருக்கும். எனது கிராமத்தில் 250 குடும்பத்தார்கள் உள்ளனர். மக்கள் 300 பேர் இருக்கிறார்கள். தாவா சொத்தின் சர்வே எண் 23/22 பொறுத்து தான் பரிகாரம் கேட்டுள்ளேன் என்றாலும் அதன் வடக்கே உள்ள 23/61ஐ பொறுத்து எந்த பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் கிராம பொதுமக்கள் விசேசங்கள் நடத்துவதற்கு பந்தல் போடுவார்கள் என்பதை நிரூபிக்க ஆவணங்கள் தாக்கல்

செய்யவில்லை. கிராமத்தில் அவ்வாறு விசேசங்கள் நடத்தப்படுவதில்லை என்றாலும் அவ்வாறு நடந்திருந்தால் ஆவணம் தாக்கல் செய்திருப்போம் என்றால் சரியல்ல. வழக்கில் தாவா சொத்தை1, 2 வாதிகள் பொதுபாதையாக பயன்படுத்தி வருவதாக சொல்லி உள்ள நிலையிலும் பொது பாதை என்பதை நிரூபணம் செய்ய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா இடம் 1,2 பிரதிவாதிகள் அனுபவத்தில் உள்ளது என்றாலும் புகைபடம்போன் ஆவணங்களை தாக்கல் செய்தால் 1, 2 பிரதிவாதிகள் அனுபவத்தில் இருக்கும் உண்மை நிலவரம் தெரியவரும் என்பதால் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தையும் அதற்கு வடக்கே உள்ள சொத்தையும் 70 ஆண்டுகளாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றாலும் அந்த இடத்தை பட்டா கேட்டு வருவாய் வட்டாட்சியரிடம் மனு கொடுத்திருப்பதால் பட்டா வழுங்கக்கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் நாயநேந்தல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் இல்லை செங்கமடையை சேர்ந்தவர்கள். நாங்கள் தாக்கல் செய்துள்ள பிராதில் பிரதிவாதிகளின் விலாசம் நாயநேந்தல் கிராமத்தில் காண்பித்துள்ளது என்றால் சரிதான். அவர்கள் பெண் கட்டிக் கொண்டு இங்கு வசித்து வருகிறார்கள். நாயநேந்தல் கிராமத்தில் 300 பேர் குடியிருக்கிறார்கள் என்றாலும் அவர்கள் சார்பாக நாங்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் சரிதான். பொதுமக்கள் எங்களை வழக்கு நடத்த கேட்டுக் கொண்ட வாக்குமூலம் அளித்த ஆவணங்களை தாக்கல் செய்துள்ளோம் என்றால் இல்லை. கிராம மக்கள் யாரும் வழக்கு நடத்தகேட்கவில்லை என்றாலும் அதனால் தான் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிராதில் சொல்லப்பட்ட சங்கதிகள் குறித்து தான் சாட்சியம் அளிக்க இயலும் என்றால் சரிதான். பிராதில் சொல்லப்படாத விசயங்கள் தவிர்த்து வேறு விசயங்கள் எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டிருந்தால் அது ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு தெற்கே ஒரு பொது பாதையை கிராம மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் பாதையும் பிரதிவாதிகளுக்கு சொந்தம் என்று கூறுவதால் பயன்படுத்த இயலவில்லை.

3. பாதைக்கும் சேர்த்து தான் வழக்கு போட்டுள்ளோம். எனது வீட்டின் சர்வே எண் ஞாபகம் இல்லை. சர்வே எண் 23 உடைய மொத்த புல வரைபடம் என்றால் சரிதான். அதில் 23/23 பொது பாதை என்றால் சரிதான். சர்வே எண் 23/22 ற்கு

வழக்கு தாக்கல் செய்துவிட்டு பொதுபாதையான 23/23 ற்கு தாக்கல் செய்ததாக சொல்கிறேன் என்றால் முழு சொத்திற்கும் தாக்கல் செய்துள்ளோம். ஒரு சர்வே எண்ணை பொறுத்து சாட்சியமளித்துவிட்டு மற்றொரு சர்வே எண் சேர்த்து சொல்வதால் வழக்கு பிராதை திருத்தம் செய்ய தயாராக உள்ளேனா தயாராக என்றால் உள்ளேன். தாவா சொத்தை கிராம மக்கள் பயன்படுத்தவில்லை என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் அனுபவத்தை பார்த்து பட்டா வாங்கிவிடுவார்கள் என்பதால் பட்ட வாங்க கூடாது என்பதற்காக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு நிரூபணம் செய்யக்கூடிய ஆவணங்களை தாக்கல் செய்யாததால் எனது வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரிய இடைநிலை மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதால் மேல்முறையீடு செய்துள்ளோம். தாவா இடத்தை நீதிமன்றத்தில் இருந்து நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்தால் மட்டும் தான் உண்மை நிலவரம் தெரியவரும் என்றால் சரிதான். ஆணையர் நியமிப்பதற்கு மனு தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். 1, 2 வாதிகள் தனிப்பட்ட சுயநலத்திற்காக கிராம மக்கள் சார்பில் ஆஜராவதாக சொல்லி பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. பிராதில் இல்லாத விசயங்களை சொல்லி நிரூபணம் வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளதால் எனது வழக்கு ஏற்றுக் கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகளின் செலவுதொகையுடன் வாதி வழக்கை தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

மறு விசாரணை –

4. இல்லை.